**நிகழும் சோபகிருது வருடம் மார்கழி மாதம் 13 ஆம் நாள் (29.12.2023) வெள்ளிக்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் மாலை 4.45 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர் 2023ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 652, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2 :**

நாமக்கல் நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2023ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 653, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3 :**

நாமக்கல் மாவட்ட நீதிமன்றங்களில் நாமக்கல் நகராட்சி ஆணையாளருக்கு எதிராக தொடரப்படும் வழக்குகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும் அவ்வழக்குகள் மீது துரிதமாக செயல்பட்டு நடத்தி முடித்திட வேண்டியும், நகராட்சி நிர்வாகத்தின் நலன் கருதியும் நாமக்கல் நகராட்சிக்கான நிலை வழக்கறிஞராக (Standing Council) செயல்பட்டுவரும் திரு. ஆர். அய்யாவு வழக்கறிஞருக்கு பதிலாக வழக்கறிஞர் திரு. த. மோகன்ராஜ், B.A., B.L., 106/3, ஜெட்டிக்குள தெரு –பி, கோட்டை மெயின் ரோடு, நாமக்கல் அவர்களை நியமனம் செய்திடவும் மற்றும் நாமக்கல் நகராட்சி சார்பாக அன்னாரை ஆஜராகி வழக்கு நடத்திட அனுமதிக்கவும், அதற்குரிய செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க. எண்: 876/2012 /சி1)**

**தீர்மானம் எண் : 654, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4 :**

நாமக்கல் நகராட்சி பகுதியில் உள்ள கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ள பயணியர் நிழற்கூடங்கள் மற்றும் நிழற்கூடங்களிலுள்ள விளம்பரப் பலகைகள் பழுதடைந்துள்ளதை சீரமைக்கும் பணிக்கு தோராய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

1. ஆர்.பி.புதூர்
2. சின்ன முதலைப்பட்டி
3. செம்பாளிக்கரடு (சக்தி பேக்கரி அருகில்)
4. திருச்செங்கோடு ரோடு (பாரத் பெட்ரோல் பங்க் அருகில்)
5. திருச்செங்கோடு ரோடு (நயாரா பெட்ரோல் பங்க் அருகில்)
6. மோகனூர் ரோடு (அரசு மருத்துவமனை அருகில்)
7. மோகனூர் ரோடு (ஐயப்பன் கோவில் அருகில்)
8. கொண்டிசெட்டிப்பட்டி
9. குன்னி மரத்தான் கோவில் மற்றும் இதர இடங்கள்

மேற்கண்ட சீரமைக்கும் பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7221/2023/இ3)**

**தீர்மானம் எண் : 655, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5 :**

நாமக்கல் நகராட்சிக்கு முதல் குடிநீர் ஆதாரமான மோகனூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து தினசரி 10 MLD குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு நகர்ப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது ஆற்று படுகையில் நீரோட்டம் மிக குறைவாக உள்ளதால் ஆற்றில் நகராட்சியின் நீர் உறிஞ்சும் கிணற்றின் நீர் மட்டம் குறைந்து தினமும் 4 MLD மட்டுமே நீரேற்றம் செய்யப்படுகின்றது. மேற்கண்ட காரணங்களால் நகர்ப்பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் வழங்க இயலவில்லை. எனவே, நகர்ப்பகுதியில் சீரான குடிநீர்

விநியோகம் வழங்கும் பொருட்டு ஆற்று படுகையின் மத்திய பகுதியிலிருந்து நகராட்சியின் வடிகிணறு பக்கமாக நீரோட்டத்திற்கு (Water Diversion) வழி வகை செய்ய ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்வதுபோல இந்த ஆண்டும் 30 நாட்களுக்கு தினசரி 10 மணி நேரம் பொக்லின் இயந்திரம் மூலம் வழி ஏற்படுத்தும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

மேற்கண்ட பணிக்கான செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7309/2023/இ3)**

**தீர்மானம் எண் : 656, அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 6 :**</u>

நாமக்கல் நகராட்சி ISO 14001:2015 தரச்சான்று பெற்று தொடர்ந்து ஒவ்வொரு மூன்றாண்டுக்கு ஒருமுறை தரச்சான்று புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட தரச்சான்று 24.01.2024 உடன் முடிவடைகிறது. எனவே மேற்கண்ட தரச்சான்றினை கலந்து ஆலோசகர் மூலம் ஒப்பந்தப்புள்ளி பெற்று உரிய அறிக்கை தயார் செய்து தரச்சான்றினை புதுப்பிக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

எனவே மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும் உத்தேச செலவினத் தொகை ரூ. 3.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 7230/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 657, அங்கீகரிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 7 :**</u>

நாமக்கல் நகராட்சி வார்டு 10 – எம்.ஜி.ஆர் நகர் காலனி மற்றும் வார்டு 11 – செம்பாளிக்கரடில் அமைந்துள்ள இரு சமுதாயக் கழிப்பிடங்களை Gramalaya, திருச்சி என்ற அமைப்பு மூலமாக இலவசமாக புதுப்பித்தல் பணி மேற்கொள்ள நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று அனுமதி வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 7440/2023/இ3)**

**தீர்மானம் எண் : 658, அங்கீகரிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 8 :**</u>

இந்நகராட்சிக்குபட்ட வார்டு எண் 2, முதலைப்பட்டியில் உள்ள நுண் உரம் செயலாக்க மையத்தில் (MCC) தரைதளம், linear pit drain சீரமைக்கவும், Electrical, plumbing மற்றும் வர்ணம் பூசுதல் பணி மற்றும் இதர பழுது சரி செய்தல் பணி மேற்கொள்ள உத்தேசமாக ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7481/2023/இ3)**

**தீர்மானம் எண் : 659, அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண். 9 :**</u>

இந்நகராட்சிக்குபட்ட வாரச்சந்தைப் பகுதியில் உள்ள நுண் உரம் செயலாக்க மையத்தில் (MCC) தரைதளம், linear pit drain சீரமைக்கவும், Electrical, plumbing மற்றும் வர்ணம் பூசுதல் பணி மற்றும் இதர பழுது சரி செய்தல் பணி மேற்கொள்ள உத்தேசமாக ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7482/2023/இ3)**

**தீர்மானம் எண் : 660, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10 :</u>**

இந்நகராட்சிக்குபட்ட சேந்தமங்கலம் சாலையில் உள்ள நுண் உரம் செயலாக்க மையத்தில் (MCC) தரைதளம், linear pit drain சீரமைக்கவும், Electrical, plumbing மற்றும் வர்ணம் பூசுதல் பணி மற்றும் இதர பழுது சரி செய்தல் பணி மேற்கொள்ள உத்தேசமாக ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7483/2023/இ3)**

**தீர்மானம் எண் : 661, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11 :</u>**

இந்நகராட்சிக்குபட்ட அனைத்து வார்டுகளிலும் பருவமழை காலத்தில் மழைநீர் தேங்கா வண்ணம் பொது மக்களின் சுகாதார அவசியம் கருதி அகன்ற கால்வாய்களை பொக்லின் இயந்திரம் வாடகை முறையில் அமர்த்தி சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ள உத்தேசமாக ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7484/2023/இ3)**

**தீர்மானம் எண் : 662, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 12 :</u>**

நாமக்கல் நகராட்சி வார்டு எண். 19, மதுரைவீரன் புதூர் தெரு, கதவு எண். 6/510இல் வசிக்கும் திருமதி.எஸ்.பாவாயி என்பவர் குடிநீர் இணைப்பிற்காக வைப்புத்தொகையாக 01.10.2020 தேதிய நாளில் ரூ.7500/– (இரசீது எண். 051/01/2/20–21/0010864) செலுத்தியுள்ளார். மேலும் 12.06.2023 தேதிய நாளில் அதே குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகை ரூ.5000/– (இரசீது எண். 051/01/1/23–24/0007294) செலுத்தியுள்ளார். மனுதாரரது வரி விதிப்பின்படி (வரி விதிப்பு எண். 051/019/900197) குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகையாக ரூ.5000/– மட்டுமே வசூலிக்கப்படவேண்டும். எனவே, மனுதாரரால் கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.7500/– அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3722/2023/இ2)**

**தீர்மானம் எண் : 663, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 13 :</u>**

நாமக்கல் நகராட்சி வார்டு எண். 07, கிழக்கு வீதி, கதவு எண். 1/197–2இல் வசிக்கும் திரு.எஸ்.தண்டாயுதபாணி என்பவர் குடிநீர் இணைப்பிற்காக வைப்புத்தொகையாக 23.01.2019 தேதிய நாளில் ரூ.5000/– (இரசீது எண். 051/01/2/18–19/0024645) செலுத்தியுள்ளார். மேலும் 10.07.2023 தேதிய நாளில் அதே குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகை ரூ.5000/– (இரசீது எண். 051/01/1/23–24/0011698) செலுத்தியுள்ளார். மனுதாரரது வரி விதிப்பின்படி (வரி விதிப்பு எண். 051/007/900273) குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகையாக ரூ.5000/– மட்டுமே வசூலிக்கப்படவேண்டும். எனவே, மனுதாரரால் கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.5000/– அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 4287/2023/இ2)**

**தீர்மானம் எண் : 664, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14 :</u>**

நாமக்கல் நகராட்சி வார்டு எண். 21, போதுப்பட்டி, கதவு எண். 6/57ஏ மற்றும் 6/57ஏ1–இல் வசிக்கும் திரு.ஆர்.சீனிவாசன் என்பவர் குடிநீர் இணைப்பிற்காக வைப்புத்தொகையாக 11.01.2019 தேதிய நாளில் ரூ.7500/– (இரசீது எண். 051/01/2/18–19/0020702) மற்றும் ரூ.5000/– (இரசீது எண். 051/01/2/18–19/0020703) செலுத்தியுள்ளார். மேலும் 12.07.2023 தேதிய நாளில் அதே குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத்தொகை ரூ.5000/– (இரசீது எண். 051/01/1/23–24/0012212) மற்றும் ரூ.5000/– (இரசீது எண். 051/01/1/23–24/0012426) செலுத்தியுள்ளார். மனுதாரரது வரி விதிப்பின்படி (வரி விதிப்பு எண். 051/021/900251 மற்றும் 051/021/900252) குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகையாக ரூ.5000/– மட்டுமே வசூலிக்கப்படவேண்டும். எனவே, மனுதாரரால் கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.12,500/– அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 5684/2023/இ3)**

**தீர்மானம் எண் : 665, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15 :**

நாமக்கல் நகராட்சி வார்டு எண். 34, முல்லை நகர், கதவு எண். 5/652/1இல் வசிக்கும் திருமதி.காவேரி ராமசாமி என்பவர் குடிநீர் இணைப்பிற்காக வைப்புத்தொகையாக 07.07.2020 தேதிய நாளில் ரூ.7500/– (இரசீது எண். 051/01/2/20–21/0001625) செலுத்தியுள்ளார். மேலும் 24.12.2022 தேதிய நாளில் அதே குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகை ரூ.7500/– (இரசீது எண். 051/01/1/22–23/0031775) செலுத்தியுள்ளார். மனுதாரரது வரி விதிப்பின்படி (வரி விதிப்பு எண். 051/034/901439) குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகையாக ரூ.7500/– மட்டுமே வசூலிக்கப்படவேண்டும். எனவே, மனுதாரரால் கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.7500/– அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 6073/2023/இ3)**

**தீர்மானம் எண் : 666, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16 :**

நாமக்கல் நகராட்சி வார்டு எண். 05, காதிபோர்டு காலனி, கதவு எண். 5/345–4ஏஇல் வசிக்கும் திருமதி.எஸ்.பத்மாவதி என்பவர் குடிநீர் இணைப்பிற்காக வைப்புத்தொகையாக 16.07.2020 தேதிய நாளில் ரூ.7500/– (இரசீது எண். 051/01/1/20–21/0004534) செலுத்தியுள்ளார். மேலும் 14.06.2023 தேதிய நாளில் அதே குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகை ரூ.7500/– (இரசீது எண். 051/01/2/23–24/0002169) செலுத்தியுள்ளார். மனுதாரரது வரி விதிப்பின்படி (வரி விதிப்பு எண். 051/005/901569) குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகையாக ரூ.7500/– மட்டுமே வசூலிக்கப்படவேண்டும். எனவே, மனுதாரரால் கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.7500/– அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3747/2023/இ2)**

**தீர்மானம் எண் : 667, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 சின்னமுதலைப்பட்டி வடக்கு காலனி பகுதியில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் புனரமைக்கவேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.11.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதிய பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 7222 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 668, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18 :**

நாமக்கல் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN 88 D 8155 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டதால் பழுதுகளை உடனடியாக சரி செய்ய வேண்டியதின்அவசர அவசியம் கருதி, மேற்கண்ட ஈப்பு வாகன நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Sri Lakshmi Auto Mobiles World, சேலம் என்ற நிறுவனத்தின் மூலமாக பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினமாக ரூ.18000/ –ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசரம் அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியைப்பெற்று மேற்கண்ட பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Sri Lakshmi Auto Mobiles World, சேலம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 6339/2023/இ2)**

**தீர்மானம் எண் : 669, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19 :**

நாமக்கல் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022இன்கீழ் திருச்செங்கோடு சாலையில் புதிய சந்தை வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சந்தை வளாகத்திற்கு புதிய மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடமிருந்து ரூ. 41,260/– செலுத்த கேட்பு பெறப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதிய பெற்று மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5448/2020/இ1)**

**தீர்மானம் எண் : 670, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20 :**

நாமக்கல் நகராட்சியில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி (I&A) 2021 –2022இன்கீழ் வார்டு எண்.2 முதலைப்பட்டி பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட பேருந்து நிலையத்தின் முன்பகுதியில் அமைந்துள்ள மூன்று மின் கம்பங்களை மாற்றி அமைக்க தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் கோரியதில் அதற்கான செலவின தொகை ரூ.1,20,400/– செலுத்த 21.11.2023அன்று கேட்பு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதிய பெற்று மேற்கண்ட தொகையை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 14381 /2016/இ1)**

**தீர்மானம் எண் : 671, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21 :**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 88 4395 (காம்பேக்டர்) எண்ணுள்ள வாகனத்தின் தகுதி சான்று பெற தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.2,37,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.583, நாள்: 29.09.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 17.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. காந்தி மோட்டர்ஸ், ஈரோடு – ரூ. 2,35,300/–
2. மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் – ரூ. 2,36,800/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1) மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த காந்தி மோட்டர்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்னனுமதியைப்பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5736/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 672, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் கடந்த **21.07.2023** முதல் **04.08.2023** வரையிலும் மற்றும் **18.08.2023** முதல் **20.08.2023** வரையிலும் பெறப்பட்டது. திருச்செங்கோடு சாலையில் உள்ள பொதுமக்களிடமிருந்து சுப்புலட்சுமி மஹாலில் முகாம் அமைத்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது. எனவே மொத்தம் **17** நாட்களுக்கு நாளொன்று ரூ.**2000/–** வீதம் ரூ.**34,000/–** சுப்புலட்சுமி மஹால் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட செலவினத்தை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5344 /2023/எப்3)**

**தீர்மானம் எண் : 673, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23 :**

நாமக்கல் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டபோது திருச்செங்கோடு சாலையில் புதிய அலுவலகம் அமைக்கப்பட்டு இயங்கிவருகிறது. பின்பு அரசாணை எண். **86**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**18.10.2021** வாயிலாக சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது அரசாணை எண்.**10**இன்படி சிறப்பு நிலை நகராட்சிக்கு பல்வேறு பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வருவாய் பிரிவிற்கு ஒரு வருவாய் அலுவலர் நிலை I A மற்றும் இரண்டு வருவாய் ஆய்வர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது வருவாய் பிரிவில் அனைவரும் அமர்ந்து பணிபுரிய போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் வருவாய் பிரிவில் கேபின்கள் அமைத்து பணியாளர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேலும் தரைதளத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் அறையில் தடுப்பு சுவர்கள் அமைத்து பால்சீலிங் பணிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதுதவிர அலுவலக கட்டிடத்தில் ஒரு சில பகுதிகளில் சிறு சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியதும் அத்தியாவசியமாக உள்ளது. எனவே மேற்கண்ட பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**15.00**இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதிய பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 6904 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 674, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24 :**

நாமக்கல் நகராட்சி அலுவலகத்திற்கு ஜனவரி **2022** முதல் டிசம்பர் **2022** வரை தினத்தந்தி மற்றும் இந்து செய்தித்தாள் விநியோகம் செய்தமைக்கு திரு.S.P. ராமச்சந்திரன் செய்தித்தாள் விற்பானையாளரிடமிருந்து தொகை ரூ.**4631/–** பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி செலவு தொகை ரூ.**4631/–**ஐ திரு.S.P.ராமச்சந்திரன் செய்தித்தாள் விற்பனையாளர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை ரூ.**4631/–** செய்தித்தாள் விற்பனையாளருக்கு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 20 /2023/பி3)**

**தீர்மானம் எண் : 675, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 தும்மங்குறிச்சி மேற்கு வீதி, கிருஷ்ணாபுரம் நடுவீதி மற்றும் பெரியூர் பகுதியில் உள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் புனரமைக்கவேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதிய பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 6596 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 676, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 26 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.39 கொண்டிசெட்டிப்பட்டி கணபதி நகர் பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் வெளியேற போதிய வடிகால் வசதி இல்லாத காரணத்தினால் மழைநீர் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குள் புகுந்து பொதுமக்களுக்கு மிகவும் சிரரமமான சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் புதிய மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.60இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்னனுமதிய பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 6597 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 677, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27 :**

நாமக்கல் நகராட்சி ISO 14001:2015 தரச்சான்று பெற்று தொடர்ந்து ஒவ்வொரு மூன்றாண்டுக்கு ஒருமுறை தரச்சான்றினை வழங்க கலந்தாலோசகர் நியமனம் செய்யும் பணி மேற்கொள்வதற்கு ரூ.3,80,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள். 27.11.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 15.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Quest Certification (P) Ltd, Chennai – ரூ.3,77,600/–
2. Bureau Of International Quality Standard, Chennai – ரூ.4,00,000 /–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த Quest Certification (P) Ltd, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7230/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 678, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 28 :**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 28 AA 7985 எண்ணுள்ள மினி லாரி வாகனத்திற்கு தகுதி சான்று பெற தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினமாக ரூ.1,90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 7486/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 679, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 29 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் இலை குப்பை அரைக்கும் TN 88 F 5619 டிராக்டர் எண்ணுள்ள வாகனத்தில் உள்ள இயந்திரத்தில் கீழ்கண்ட பழுதுகள் ஏற்பட்டுள்ளுதால், அதனை சரிசெய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

1. 6 அடி பட்டை, 2 அடி பட்டை கேஸ் வெல்டிங்
2. பேரிங் நெட்டு வெல்டிங்

எனவே மேற்கண்ட இரு பணிகளை மேற்கொண்டால் மட்டுமே வாகனத்தில் குப்பைகளை அரைக்க இயலும் என்பதால் மேற்கண்ட பழுதுகளை நீக்கம் செய்ய மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.12,500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 7551/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 680, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 30 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 88 4395 (காம்பேக்டர்) எண்ணுள்ள வாகனத்தின் தகுதி சான்று பெற தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.2,37,000/— செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.583, நாள்: 29.09.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 17.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. காந்தி மோட்டர்ஸ், ஈரோடு – ரூ. 2,35,300/—
2. மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் – ரூ. 2,36,800/—

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :—**

1) மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த காந்தி மோட்டர்ஸ், ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்னனுமதியைப்பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 5736/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 681, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 31 :</u>**

நாமக்கல் நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவில் இயங்கி வரும் பிரிண்டர்களில் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் கணினிகளுக்கு மற்றும் பிரிண்டர்களுக்கு உதிரி பாகங்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. எனவே இரண்டு லேசர் பிரிண்டர்கள் மற்றும் அதற்கான டோனர்கள் மற்றும் Modem ஒன்று, Wifi dongle 4, Spike 2 Caple உள்ளிட்ட கணினி உதிரிபாகங்கள் கொள்முதல் செய்யவும் அதற்கான செலவினத் தொகை ரூ.1.00இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7360/2023/இ1)**

**தீர்மானம் எண் : 682, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 32 :</u>**

நாமக்கல் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் ஜெராக்ஸ் வசதியுடன் கூடிய பிரிண்டர்களுக்கும் சிறிய வகை பிரிண்டர்களுக்கும் தேவையான டோனர்கள் கொள்முதல் செய்ய வேண்டியதும் சிறு பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டிய பணி ரூ.2.30 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். , நாள். 09.11.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 15.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. GSC Technology & Service, கொமாரபாளையம் – ரூ. 2,29,970/–
2. Perennial System, சேலம் – ரூ. 2,33,026/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாக சமர்ப்பித்த GSC Technology & Service, கொமாரபாளையம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண்.2304/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 683, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 33 :</u>**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நாமக்கல் நகராட்சி பகுதிகளில் உள்ள 5 நுண் உர மையங்களின் வளாகப் பகுதிகளில் ஈக்கள் அதிகமாக உள்ளதால், நுண் உர மையங்களில் பணியாற்றும் பணியாளருக்கு மிகவும் இடையூறாக உள்ளது. மேற்படி ஈக்கள் நுண் உர மையங்களின் அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு செல்வதால் பொதுமக்களுக்கு நோய் தொற்று பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. எனவே ஈக்களை அழித்து கட்டுப்படுத்தவும், மேலும் உற்பத்தி ஆகமாலும் தடுக்கவும் ஒட்டுண்ணி மருந்தினை சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8297/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 684, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 34 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 28 AB 2237 எண்ணுள்ள (Compactor) வாகனத்திற்கு தகுதி சான்று பெற தேவையான மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனைகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் உத்தேச செலவினமாக ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7317/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 685, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 35 :</u>**

அரசாணை எண். 22 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.01.2011–ன் வாயிலாக நாமக்கல் நகராட்சி சுற்றியுள்ள 9 ஊராட்சிகளும் இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்டு, தற்போது 55.24 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட 39 வார்டுகளை உள்ளடக்கிய சிறப்பு நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது. இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 119491 ஆகும். இந்நகராட்சிக்கு கீழ்கண்ட இரண்டு நீர் ஆதாரங்களிலிருந்து குடிநீர் நீரேற்ற நிலையங்கள் மூலம் நீரேற்றம் செய்து தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | நீரேற்று நிலையங்கள் விவரம் | தினசரி பெறப்படும் குடிநீரின் அளவு |
|---|---|---|
| 1 | மோகனூரில் காவிரி ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்ட நாமக்கல் குடிநீர் திட்டம். | 8.50 MLD |
| 2 | ஜேடர்பாளையத்தில் காவேரி நீர் ஆற்றினை நீர் ஆதாரமாக கொண்ட புதிய அபிவிருத்தி நாமக்கல் குடிநீர் திட்டம். | 10.10 MLD |

மேற்கண்ட இரண்டு ஆதாரங்களில் முதல் திட்டமான மோகனூர் காவேரி ஆற்றில் இருந்து மோகனூர் நீரேற்று நிலையத்திற்கு நீரேற்றம் செய்து அணியாபுரம் நீருந்து நிலையம் வழியாக நாமக்கல் நகர தரமட்ட நீர் தேக்க தொட்டியில் நீர் சேகரிக்கப்பட்டு அதிலிருந்து 9 மேல்நிலை தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகம் 19 வார்டுகளுக்கு செய்யப்பட்டு வருகிறது.

நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள ஜேடர்பாளையம் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் (Water Supply Imporvment Scheme) ஜேடர்பாளையம் பகுதியில் காவேரி ஆற்றங்கரையில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு நீரேற்றம் செய்து கபிலக்குறிச்சியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து சுத்தநீரை தும்மங்குறிச்சி நீரேற்றுநிலையம் வழியாக 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் 20 வார்டுகளுக்கு செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட இரண்டு நீர் ஏற்று நிலையத்தில் மோகனூர் நீர் ஏற்று நிலையம், அணியாபுரம் நீருந்துநிலையம் பரமத்திரோடு தரைமட்ட தொட்டிகளுக்கு மற்றும் 9 மேல்நிலை தொட்டிகளுக்கு பார்வையில் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு எண் 23651/2013/DO1, நாள் :18.10.2019 படி வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெளிக்கொணர்வு முகமை பணியாளர்கள் அமர்த்தி பணிமேற்கொள்ள அனுமதித்த காலம் முடிவுற்று ஒப்பந்த நீட்டிப்பு செய்து இயக்குதல் மற்றும் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

ஜேடர்பாளையம் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு சோதனை ஓட்டம் முடிவடைந்து நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்படைக்கப்பட உள்ளது. ஒப்படைத்த உடன் நாமக்கல் நகராட்சியால் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணிக்கு தேவையான பணியாளர்கள் இந்நகராட்சியில் இல்லை. மேலும் பழைய நாமக்கல் குடிநீர் திட்டத்திற்கு இயக்குதல் மற்றும் குடிநீர் விநியோகத்திற்கு வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் பணி அமர்த்தப்பட்ட ஒப்பந்த காலமும் முடிவுறுவதால் மேற்கண்ட இரண்டு குடிநீர் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண். 21787/2021/EA2, நாள் :02.10.2021 அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி, மேற்கண்ட தலைமை நீரேற்றுநிலையங்கள், சுத்திகரிப்பு நிலையம், நீருந்துநிலையம், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் இதர சார்ந்த பணிகள் இயக்கம் மற்றும் பராமரிப்பு கீழ்கண்ட பணியாளர்கள் அமர்த்தி இயக்கமும் பராமரிப்பும் மேற்கொள்ள அட்டவணையில் கண்டுள்ளபடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியாளர்களின் விவரம் | அடிப்படை ஊதியம் (நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு) | தேவைப்படும் பணியாளர்கள் | மொத்தம் வருட ஊதியம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மின்னாளர்<br>Grade –I (C Certificate) | 783.00 | 8 | 22.86 |
| 2 | மின்னாளர்<br>Grade –II ( B Certificate) | 778.00 | 6 | 17.04 |
| 3 | குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர் | 714.00 | 3 | 7.82 |
| 4 | பராமரிப்பு உதவியாளர் | 618.00 | 58 | 129.70 |
| 5 | நீர் பகுப்பாய்வக உதவியாளர்<br>(Lab Assistant) | 724.00 | 1 | 2.64 |
| 6 | துலக்குநர் | 492.00 | 2 | 3.59 |
| மொத்தம் | | | 80 | 188.16 |

**அடிப்படை ஊதியம் – ரூ. 188.16 இலட்சம்**

**மொத்தம் ஊதியம் (ஊதியம்,** EPF, ESI, GST **சேவை கட்டணம் ஆகியவைகளை சேர்த்து) – ரூ. 268.16 இலட்சம்**

மேற்கண்ட மதிப்பீட்டின்படி பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி தடையின்றி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் வழங்க தயார்

செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.270.00 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதி வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பித்து அனுமதி பெற்று இயக்கம் பராமரிப்பு பணிகள் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 4936/2023/இ2)**

**தீர்மானம் எண் : 686, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 36 :**

நாமக்கல் நகராட்சி வார்டு எண். 30, ஜெய் நகர், கதவு எண். 4/288–2இல் வசிக்கும் திரு.எம்.சக்திவேல் என்பவர் குடிநீர் இணைப்பிற்காக வைப்புத்தொகையாக 07.09.2020 தேதிய நாளில் ரூ.6500/– (இரசீது எண். 051/01/2/20–21/0007655) செலுத்தியுள்ளார். மேலும் 03.10.2022 தேதிய நாளில் அதே குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகை ரூ.1000/– (இரசீது எண். 051/01/2/22–23/0006402) செலுத்தியுள்ளார். மனுதாரரது வரி விதிப்பின்படி (வரி விதிப்பு எண். 051/030/900665) குடிநீர் இணைப்பிற்கு வைப்புத்தொகையாக ரூ.5000/– மட்டுமே வசூலிக்கப்படவேண்டும். எனவே, மனுதாரரால் கூடுதலாக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை ரூ.2500/– அன்னாருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7091/2023/இ3)**

**தீர்மானம் எண் : 687, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 37 :**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் கொசவம்பட்டி உரக்கிடங்கு மற்றும் வாரச்சந்தை நுண் உர மையம் ஆகிய இரண்டு இடங்களில் மட்காத மறுசுழற்சி செய்ய இயலாத எரியூட்டக்கூடிய பிளாஸ்டிக் பைகளை Bailing செய்ய Bailing machine கொள்முதல் செய்ய ரூ.14.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8273/2023/இ3)**

**தீர்மானம் எண் : 688, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 38 :**

நாமக்கல் நகராட்சி திருச்செங்கோடு சாலையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22இன்கீழ் கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை வளாகத்தை சுற்றி பேவர் பிளாக் அமைத்து பேவர் பிளாக் மூலம் அணுகு சாலை அமைக்கும் பணியில் தினசரி சந்தையின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள விற்பனை கொட்டகையினை சுற்றி பேவர் பிளாக் அமைத்து அணுகு சாலை அமைப்பதற்கு ரூ.9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8274/2023/இ3)**

**தீர்மானம் எண் : 689, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 39 :**

நாமக்கல் நகராட்சி திருச்செங்கோடு சாலையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22இன்கீழ் கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை வளாகத்தை சுற்றி பேவர் பிளாக் அமைத்து பேவர் பிளாக் மூலம் அணுகு சாலை அமைக்கும் பணியில் தினசரி சந்தையின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள Shed யினை சுற்றி பேவர் பிளாக் அமைத்து அணுகு சாலை அமைப்பதற்கு ரூ.11.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8275/2023/இ3)**

**தீர்மானம் எண் : 690, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 40 :**

நாமக்கல் நகராட்சி திருச்செங்கோடு சாலையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22இன்கீழ் கட்டப்பட்டுள்ள தினசரி சந்தை வளாகத்தை சுற்றி பேவர் பிளாக் அமைத்து பேவர் பிளாக் மூலம் அணுகு சாலை அமைக்கும் பணியில் தினசரி சந்தையின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள Shed யினை சுற்றி பேவர் பிளாக் அமைத்து அணுகு சாலை அமைப்பதற்கு ரூ.10.60 இலட்சத்திற்கு மதிப்பீடு

தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8276/2023/இ3)**

**தீர்மானம் எண் : 691, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 41 :</u>**

நாமக்கல் நகராட்சி சேந்தமங்கலம் சாலையில் அமைந்துள்ள பொருட்கள் மீட்பு கூடம் (Material Recovery Facility) கட்டும் பணி முடிக்கப்பட்டு கட்டிடத்தின் முன்புறம் உள்ள காலியிடத்தில் பேவர் பிளாக் அமைத்து பேவர் பிளாக் தளம் அமைக்கவும் சுற்றுசுவர் Gate அமைக்கவும் மட்காத மறுசுழற்சி செய்ய இயலாத எரியூட்டக்கூடிய பிளாஸ்டிக் பைகளை Bailing செய்ய Bailing machine கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.14.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8277/2023/இ3)**

**தீர்மானம் எண் : 692, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 42 :</u>**

நாமக்கல் நகராட்சி கொசவம்பட்டி ரோஜா நகர் பகுதியில் அமைந்துள்ள பொருட்கள் மீட்பு கூடம் (Material Recovery Facility) கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. கட்டிடத்திற்கு அணுகு சாலை அமைக்கவும் மட்காத மறுசுழற்சி செய்ய இயலாத எரியூட்டக்கூடிய பிளாஸ்டிக் பைகளை Bailing செய்ய Bailing machine கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.12.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8278/2023/இ3)**

**தீர்மானம் எண் : 693, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 43 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வெளிப்புற தார்சு கடை எண்.07, வரிவிதிப்பு எண். 051/88ஐ திரு. வி. ஷஃபி பெயரில் உள்ள கடையை திரு. என். மணிவாசகம் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது .

மேற்படி கடைக்கு திரு. வ. ஷபி என்பவர் 29.11.2023ஆம் தேதியில் இவ்வலுவலகத்தில் நேரில் வந்து திரு. என். மணிவாசகம் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்படுவதற்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்பதை விண்ணப்பம் மூலம் சமர்ப்பித்துள்ளதின் படியும், அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள் : 03.07.2007இன்படி அனுமதியற்ற அனுபோகதார்களின் நேர்வில் ஒரு முறை மட்டும் அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் 12 மாத வாடகையை பெயர் மாற்றம் கட்டணமாவும் மற்றும் 12 மாத வாடகையை வைப்பு தொகையாகவும் செலுத்தப்பட பின்னரே பெயர்மாற்றம் செய்யப்பட வேண்டும் என உத்திரவிடப்பட்டதின் படி திரு. என். மணிவாசகம் என்பவரிடமிருந்து வைப்பு தொகை ரூ.1,90,440/ மற்றும் பெயர்மாற்றம் கட்டணம்ரூ.1,90,440/ செலுத்தப்பட்டதால் பேருந்து நிலைய வெளிப்புற தார்சு கடை எண்.07, வரிவிதிப்பு எண்.051/88 ஐ திரு. வி. ஷஃபி பெயரில் இருந்து திரு. என். மணிவாசகம் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 4235/2023/அ2)**

**தீர்மானம் எண் : 694, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 44 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் உள்ள நேரம் காப்பாளர் அறையினை திருமதி. பா.பிரேமா, நாமக்கல் என்பவருக்கு 01.11.2023ஆம் தேதியில் இருந்து உரிமம் அனுபவித்துக்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி உரிமதாரர் 09.11.2023ஆம் தேதிய விண்ணப்பத்தில் கடையின் மேற்கூறை சுவர்கள் சேதமடைந்து உள்ளதையும், நுழைவுவாய் பகுதியில் உள்ள மின் இணைப்பு பெட்டி உள்ள இடம் சேதம் அடைந்து உள்ளதால் மேற்கு பகுதியில் உள்ள நுழைவுவாயினை அடைத்துவிட்டு வடக்கு பகுதிக்கு மாற்றம் செய்யப்படுவதற்கு அன்னாரின் சொந்த செலவில் செய்து கொள்ள அனுமதி வழங்க கோரியுள்ளார். மேற்கண்ட கட்டிடத்தை மாற்றியமைக்க ஏற்படும் மதிப்பீட தொகை ரூ.16,000/—ஐ நகராட்சிக்கு உரிமதாரர் செலுத்தி கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை (Stability) பாதிக்காத வகையில் உரிமதாரர் தெரிவித்த குறைபாடுகள் சரிசெய்து கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்ட பணிக்கான தொகை ரூ.16,000/—ஐ நகராட்சிக்கு செலுத்தி கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை (Stability) பாதிக்காத வகையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 4922/2022/அ2)**

**தீர்மானம் எண் : 695, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 45 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான துறையூர் சாலையில் உள்ள பாவலர் முத்துசாமி நகராட்சி திருமண மண்டபம் மற்றும் சின்ன முதலைப்பட்டியில் உள்ள சமுதாய கூடம் ஆகிய இரண்டையும் தற்போது பழுது பணிகள் அனைத்தும் சரிசெய்து புதுப்பித்தல் பணி முடிவு பெற்றுள்ளதால் மண்டபம் மற்றும் சமுதாய கூடம் ஆகிய இரண்டிற்கும் வாடகை தொகையினை கீழ்கண்டவாறு மாற்றம் செய்யலாம்.

| வ. எண் | நகராட்சிக்கு சொந்தமான மண்டப விவரம் | | தற்போது பெறும் வாடகை விவரம் ரூ. | | | | | மாற்றம் செய்யப்பட உள்ள வாடகை விவரம் ரூ. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வாடகை | சேவை வரி (18%) | தூய்மை கட்டணம் | வைப்புத் தொகை | கொடி நாள் | வாடகை | சேவை வரி (18%) | தூய்மை கட்டணம் | வைப்புத் தொகை | கொடி நாள் |
| 1 | 2 | | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | நகராட்சி பாவலர் முத்துசாமி திருமண மண்டபம் | 24 மணி நேரத்திற்கு | 5000 | 900 | 1000 | 5000 | 100 | 10000 | 1800 | 1500 | 5000 | 100 |
| | | 12 மணி நேரத்திற்கு | 3000 | 540 | 1000 | 3000 | 100 | 5000 | 900 | 1250 | 2500 | 100 |
| 2 | சின்ன முதலைப்பட்டி சமுதாய கூடம் | | 2500 | 450 | 750 | 2500 | 100 | 5000 | 900 | 1000 | 2500 | 100 |
| 3 | நல்லிபாளையம் சமுதாய கூடம் | | 1500 | 270 | 500 | 1500 | 100 | 1500 | 270 | 500 | 1500 | 100 |

மேலும் கலம் எண் 11இல் செலுத்தப்படும் வைப்பு தொகையில் மின்சாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஒரு யூனிட்டுக்கு ரூ. 20/— கட்டணத்தை கழித்துக் கொண்டு மீதமுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்கவும், மேற்கண்ட விவரப்படி மாற்றி நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகையினை நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 6974/2023/அ2)**

**தீர்மானம் எண் : 696, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 46 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட ஓராண்டு குத்தகை இனங்கள் மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களை அனுபவித்துக்கொள்ள உரிமத்திற்கு உரிமையினை வழங்குவதற்கு ஆறாவது அழைப்பாக 30.11.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

கீழ்கண்ட உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் எவரும் வழங்கவில்லை, கீழ்காணும் விபரப்படி பொது ஏலம் மட்டும் கோரப்பட்டுள்ளது.

| வ. எண். | உரிம இனம் |
|---|---|
| 1. | சந்தை வளாகத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் – 1இல் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |

| | |
|---|---|
| 2. | சந்தை வளாகத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் – 2இல் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 3. | வார்டு எண்.24, செல்லாண்டியம்மன் கோவில் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |
| 4. | சந்தை வளாகத்தில் உள்ள RCC அலுவலக கட்டிடத்தை பயன்படுத்திக் கொள்ளும் உரிமம். |
| 5. | சந்தை வளாகத்தில் உள்ள RCC உணவக கட்டிடத்தில் உணவகம் நடத்தி கொள்ளும் உரிமம். |

மேற்கண்ட வரிசை எண்1,2,3 மற்றும் 5இல் உள்ள இனத்திற்கு மட்டும் பொது ஏலம் மட்டும் கோரப்பட்டுள்ளது . இவற்றில் வரிசை எண்.4இல் உள்ள இனத்திற்கு ஒப்பந்தபுள்ளி மற்றும் பொது ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.

மேற்கண்ட வரிசை எண்.1இல் உள்ள சந்தை வளாகத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் – 1இல் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்விகள் கோரப்பட்டது.

| வ.எண் | ஏலதாரரின் விபரம் | ஏலத் தொகை ரூ. (வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | திரு. மு. துரைமுருகன்,<br>த/பெ. முத்துசாமி,<br>1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,<br>நாமக்கல். | 54,000/– |
| 2 | Sri SMT & Co நிர்வாக பங்குதாரர்,<br>திரு. எஸ். முத்துசாமி,<br>4/235–1, எஸ்.எம்.டி காம்ப்ளக்ஸ்<br>உடுப்பம் மெயின் ரோடு, புதன் சந்தை, நாமக்கல். | 53,250/– |

மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.1இல் உள்ள திரு. மு. துரைமுருகன்,த/பெ. த்துசாமி,1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,நாமக்கல் என்பவரின் ஏலக்கேள்வி உயர்ந்த கேள்வியாக வருடத்துக்கு ரூ.54,000/–ம் அதிகமாக உள்ளது.

மேற்கண்ட இனங்களில் வரிசை எண்.2இல் உள்ள சந்தை வளாகத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் – 2இல் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்விகள் கோரப்பட்டது.

| வ.எண் | ஏலதாரரின் விபரம் | ஏலத் தொகை ரூ. (வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | திரு. மு. துரைமுருகன்,<br>த/பெ. முத்துசாமி,<br>1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,<br>நாமக்கல். | 55,000/– |
| 2 | Sri SMT & Co நிர்வாக பங்குதாரர்,<br>திரு. எஸ். முத்துசாமி,<br>4/235–1, எஸ்.எம்.டி காம்ப்ளக்ஸ்<br>உடுப்பம் மெயின் ரோடு, புதன் சந்தை, நாமக்கல். | 54,000/– |

மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.1இல் உள்ள திரு. மு. துரைமுருகன்,த/பெ. முத்துசாமி,1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,நாமக்கல் என்பவரின் ஏலக்கேள்வி உயர்ந்த கேள்வியாக வருடத்துக்கு ரூ.55,000/–ம் அதிகமாக உள்ளது.

மேற்கண்ட இனங்களில் வரிசை எண்.3இல் வார்டு எண்.24, செல்லாண்டியம்மன் கோவில் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கீழ்கண்டவாறு ஏலக்கேள்விகள் கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏலதாரரின் விபரம் | ஏலத் தொகை ரூ. (வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | திரு. மு. துரைமுருகன்,<br>த/பெ. முத்துசாமி,<br>1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,<br>நாமக்கல். | 60,000/– |

| | | |
|---|---|---|
| 2 | Sri SMT & Co நிர்வாக பங்குதாரர்,<br>திரு. எஸ். முத்துசாமி,<br>4/235–1, எஸ்.எம்.டி காம்ப்ளக்ஸ்<br>உடுப்பம் மெயின் ரோடு, புதன் சந்தை, நாமக்கல். | 59,500/– |

மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.1இல் உள்ள திரு. மு. துரைமுருகன்,த/பெ. முத்துசாமி,1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,நாமக்கல் என்பவரின் ஏலக்கேள்வி உயர்ந்த கேள்வியாக வருடத்துக்கு ரூ.60,000/–ம் அதிகமாக உள்ளது.

மேற்கண்ட இனங்களில் வரிசை எண்.5இல் உள்ள சந்தை வளாகத்தில் RCC உணவக கட்டிடத்தில் உணவகம் நடத்தி கொள்ளும் உரிமத்திற்கு கீழ்கண்டவாறு ஏலக்கேள்விகள் கோரப்பட்டுள்ளது

| வ.எண் | ஏலதாரரின் விபரம் | ஏலத் தொகை ரூ. (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | திரு. மு. துரைமுருகன்,<br>த/பெ. முத்துசாமி,<br>1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,<br>நாமக்கல். | 32,000/– |
| 2 | Sri SMT & Co நிர்வாக பங்குதாரர்,<br>திரு. எஸ். முத்துசாமி,<br>4/235–1, எஸ்.எம்.டி காம்ப்ளக்ஸ்<br>உடுப்பம் மெயின் ரோடு, புதன் சந்தை, நாமக்கல். | 33,000/– |

மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.2இல் உள்ள Sri SMT & Co நிர்வாக பங்குதாரர், திரு. எஸ். முத்துசாமி, 4/235–1, எஸ்.எம்.டி காம்ப்ளக்ஸ் உடுப்பம் மெயின் ரோடு, புதன் சந்தை, நாமக்கல் என்பவரின் ஏலக்கேள்வி உயர்ந்த கேள்வியாக மாதம் ஒன்றுக்கு ரூ.33,000/–ம் அதிகமாக உள்ளது.

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. வரிசை எண்.1இல் உள்ள சந்தை வளாகத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் – 1இல் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு. மு. துரைமுருகன்,த/பெ. முத்துசாமி,1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,நாமக்கல் என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
2. வரிசை எண்.2இல் உள்ள சந்தை வளாகத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் – 2இல் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு. மு. துரைமுருகன்,த/பெ. முத்துசாமி,1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,நாமக்கல் என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
3. வரிசை எண்.3இல் உள்ள வார்டு எண்.24, செல்லாண்டியம்மன் கோவில் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் திரு. மு. துரைமுருகன்,த/பெ. முத்துசாமி,1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,நாமக்கல் என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
4. வரிசை எண்.5இல் உள்ள சந்தை வளாகத்தில் உள்ள RCC உணவக கட்டிடத்தில் உணவகம் நடத்திக் கொள்ளும் உரிமம் திரு. எஸ். முத்துசாமி, 4/235–1, எஸ்.எம்.டி காம்ப்ளக்ஸ் உடுப்பம் மெயின் ரோடு, புதன் சந்தை, நாமக்கல் என்பவரின் ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
5. வரிசை எண்.4இல் சந்தை வளாகத்தில் உள்ள அலுவலக கட்டிடத்திற்கு மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 2428/2023/அ2)**

**தீர்மானம் எண் : 697, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 47 :</u>**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் வெளிபுறத்தில் உள்ள தினசரி மார்க்கெட் கடை வரிவிதிப்பு எண்.051/13 திரு. ஆர்வி. செல்வராஜன் என்பவர் பெயரில் உள்ளது. திரு. ஆர்வி. செல்வராஜன் பெயரில் உள்ளதை மேற்படி அன்னார் இறந்து விட்டதால் அவரது வாரிசுதாரர் அவரது மனைவி திருமதி.ரேணுகாதேவி என்பவர் பெயர் மாற்றம் செய்ய கோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி கடையை அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள் : 03.07.2007இன்படி வாரிசு அடிப்படையில் செல்வராஜனின் வாரிசுதாரர்கள் மூன்று பேரும் அவரது

தாயார் திருமதி. ரேணுகாதேவி பெயருக்கு பெயர் மாற்றம் செய்துகொள்ள ஆட்சேபனையில்லா பத்திரம் வழங்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட தினசரி மார்க்கெட் கடை வரிவிதிப்பு எண்.051/13ஐ திரு. ஆர்.வி. செல்வராஜன் பெயரிலிருந்து அவரது மனைவி திருமதி.ரேணுகாதேவி பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 8269/2023/அ2)**

**தீர்மானம் எண் : 698, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 48 :**

நாமக்கல் நகராட்சியில் 2023–2024ஆம் ஆண்டுக்கு வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவையிலுள்ள இனங்களில் அதன் உரிமையாளர்களுக்கு 30.11.2023க்குள் நிலுவையின்றி செலுத்தி முடிக்க அறிவிப்பு வழங்கப்படவுள்ளதால் அவ்வறிப்பினை அச்சடித்து வழங்குவதற்கு 1 அறிவிப்பு அச்சடித்து வழங்க ஆகும் செலவினத்திற்குரிய விலைப்புள்ளி கோரப்பட்டதில் 02.11.2023ம் தேதியன்று கீழ்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விலைப்புள்ளி வழங்கிய நிறுவனம் | ரூ. |
|---|---|---|
| 1 | ஓம் விநாயகா ஆப்செட் பிரிண்டர்ஸ், 1ஏ, பரமத்தி ரோடு, கார்ப்பரேசன் வங்கி அருகில், நாமக்கல் | 0.80 பைசா |
| 2 | லட்சுமி ஆப்செட் பிரிண்டர்ஸ், மோகனூர் ரோடு, நாமக்கல். | 0.95 பைசா |
| 3 | திருமுருகன் பிரிண்டர்ஸ், ரமேஷ் தியேட்டர், திருச்சி ரோடு, நாமக்கல். | 1.25 பைசா |

எனவே மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1இல் உள்ள ஓம் விநாயகா ஆப்செட் பிரிண்டர்ஸ், 1ஏ, பரமத்தி ரோடு, கார்ப்பரேசன் வங்கி அருகில், நாமக்கல் நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளதால் தேவையான எண்ணிக்கையிலான அறிவிப்புகளை அச்சடித்து பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்: 2545 /2023/அ1)**

**தீர்மானம் எண் : 699, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 49 :**

நாமக்கல் நரகாட்சிக்கு சொந்தமான ஜி.பி. சோமசுந்தரம் பேரங்காடி கடை எண். 10ஐ உரிமம் பெற்று நடத்தி வந்த திரு. பி.இளங்கோவன் பெயரிலிருந்து திரு. பி.மணிமாறன் பெயருக்கு இவ்வலுவலக ந.க.எண். 2546/2023/அ2, நாள். 08.06.2023ல் பெயர் மாற்றம் செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடைக்கு பெயர் மாற்றம் செய்ய திரு. பி.மணிமாறன் என்பரால் ஒரு வருடத்திற்கான வாடகை தொகை ரூ. 230112/– வைப்பு தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது திரு. பி.இளங்கோவன் என்பவர் மேற்படி கடைக்கு ஏற்கனவே செலுத்திய வைப்பு தொகை ரூ. 230124/– திரும்ப வழங்க கோரி 12.09.2023ம் தேதியில் விண்ணப்பம் வழங்கியுள்ளார். எனவே ஜி.பி. சோமசுந்தரம் பேராங்கடி கடை எண். 10க்கு திரு. பி.இளங்கோவன் செலுத்தி உள்ள வைப்பு தொகை கீழ்கண்ட விவரப்படி வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளது.

| காலங்கடந்த வைப்பு தொகை பதிவேடு விபரம் | பக்க எண். | தொகை ரூ. |
|---|---|---|
| Lapsed Deposit Register VOL – XVI (2016) | 38 | 174000 |
| Lapsed Deposit Register VOL – XV (2019) | 16 | 26100 |
| Deposit Register 2023-2024 Vol –I | 36 | 30024 |
| **Total** | | **230124** |

எனவே மேற்கண்ட வைப்பு தொகை ரூ. 230124/—ஐ திரு. பி.இளங்கோவன் என்பவருக்கு திரும்ப வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 5824 /2023/பி3)**

**தீர்மானம் எண் : 700, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 50 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட நல்லிபாளையம் கிராமம், சர்வே எண்கள்.**169/2**A1D2,2A1D4-இல் 0.7969 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திரு.வி.மகேந்திரன் மற்றும் திரு.து.மகாதேவன், மோகனூர், நாமக்கல் ஆகியோர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.NKL/C0FYY7S1/14699/2023/TCP,நாள்.26.10.2023ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைப்படத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின்(Third Party Inspection ) தர ஆய்வு சான்றின் அடிப்படையிலும், மேற்படி இடத்தில் சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும், இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி மனைப்பிரிவு சாலைகள் ஒப்படைத்ததை ஏற்கலாம். பொது ஒதுக்கீடு இடத்திற்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் **09.10.2023**ஆம் தேதிய தானபத்திரம் ஆவண எண்.**4275**—இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வசதி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**2,80,000/—** மற்றும் தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**2,50,000/—**யும் மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டும் என நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கிய குறிப்பின் அடிப்படையில், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு மனுதாரர் கீழ்க்கண்ட விவரப்படியான தொகைகளை நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண். | கட்டண விவரங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு கட்டணம் | ரூ.2,80,000/— |
| 2 | குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | ரூ.2,50,000/— |
| 3 | மனைப்பிரிவு கட்டணம் (0.7969 ஏக்கர்) | ரூ. 30,000/— |
| 4 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ. 15,000/— |
| 5 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ. 1000/— |
| 6 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste ) | ரூ. 2,000/— |
| 7 | அரசு வழிகாட்டி மதிப்பு கட்டணம் 3% | ரூ.60,000/— |
| 8 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம் | ரூ.1,00,000/— |
| | **மொத்தம்** | **ரூ.7,38,000/—** |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/KVOMPUKS/6267/202/TCP, நாள்.21.03.2023இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.341/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**12843/2022**/டிபி1, நாள்.**20.10.2022**—இன்படி, மனைப்பிரிவிற்கான சந்தை மதிப்பு கட்டணம் 3%, பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதையும் மற்றும் பொது இட ஒதுக்கீடுக்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தியுள்ளதையும் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

2. மனுதாரர் பராமரிப்பு வைப்புத் தொகை, சந்தை மதிப்பு கட்டணம் 3% மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்திய பின்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.6679/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 701, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 51 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம் , காவேட்டிப்பட்டி பகுதி சர்வே எண்கள்.422/8, 438/4ஏ, 438/4பி, 438/4சி மற்றும் 438/4டி,437/4ஏஇல் பகுதியளவு உள்ள 2286.69 சதுடிகள் கொண்ட நிலத்தில் பொதுமக்கள் பயனடையும் வகையில் சாலை அமைத்து நாமக்கல் நகராட்சி வசம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்து நிலத்தின் உரிமையாளர்கள் திருடி.கந்தசாமி, திருமதி.பி.பாப்பாயம்மாள், திருமதி.எம்.காளியம்மாள், காவேட்டிப்பட்டி, வள்ளிபுரம் அஞ்சல், நாமக்கல் ஆகியோர் தானப்பத்திரம் வழங்கி உள்ளனர். காவேட்டிப்பட்டி பகுதி சர்வே எண்கள்.422/8, 438/4ஏ, 438/4பி, 438/4சி மற்றும் 438/4டி,437/4ஏஇல் பகுதியளவு உள்ள நிலங்கள் குறித்து வருவாய் துறையின் கிராம நிர்வாக அலுவலர் குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும், நகராட்சி பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து சாலை நல்ல நிலையில் அமைக்கப்பட்டு உள்ளது என குறிப்பு வழங்கியுள்ளார். எனவே, காவேட்டிப்பட்டி பகுதி சர்வே எண்கள்.422/8, 438/4ஏ, 438/4பி, 438/4சி மற்றும் 438/4டி,437/4ஏஇல் பகுதியளவு உள்ள 2286.69 சதுடிகள் கொண்ட நிலத்தில் அமைந்துள்ள சாலையினை பொதுமக்களின் நலன் கருதி மேற்படி நிலத்தின் உரிமையாளர்கள் தானப்பத்திரம் மூலம் இலவசமாக சாலை பயன்பாட்டிற்காக வழங்கிய நிலத்தினை ஏற்கவும், அதனை ஏற்கனவே சர்வே எண்.437/3இல் உள்ள நகராட்சி சாலையுடன் இணைப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.7648/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 702, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 52 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட நாமக்கல் டவுன், வார்டு எண்.10, திருச்செங்கோடு ரோடு, கிராம சர்வே எண்.163/1–ற்கு தற்சமயம் உட்பிரிவின்படி வார்டு–ஏ, பிளாக்–4, நகரளவை எண்.20/1சி மற்றும் 20/1டி–இல் உள்ள மனை எண்.48ஏ கிழபுர பாகம், மேற்புர பாகம் முறையே 1131.1/4 மற்றும் 1118.3/4 ஆக மொத்தம் 2250 சதுரடிகள் கொண்ட காலிமனை நிலத்தில் பொதுமக்கள் பயனடையும் வகையில் சாலை அமைத்து நாமக்கல் நகராட்சி வசம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்து நிலத்தின் ஜெனரல் பவர் பத்திரம் மூலம் பவர் பெற்ற திரு.து.செல்வகுமார் தானப்பத்திரம் வழங்கி உள்ளார். நாமக்கல் டவுன், வார்டு எண்.10, திருச்செங்கோடு ரோடு, நகரளவை எண்.20/1சி மற்றும் மற்றும் 20/1டிஇல் உள்ள நிலம் குறித்து வருவாய் துறையின் நகர சார் ஆய்வாளர் அவர்களின் குறிப்புடன் இணையதள நகரளவை நில ஆவணங்களில் விஸ்திரம்.0.04.69.5, தீர்வை.0.20 பைசா திரு.கண்ணன் த/பெ.துரைசாமி மற்றும் விஸ்திரம்.0.05.10, தீர்வை.0.20 பைசா அர்த்தநாரீஸ்வரர் ஆர்கேட் நிறுவனத்திற்காக எம்.வசந்த் என்கிற வசந்த கணபதி, த/பெ.முத்து கணபதி ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என 19.12.2023 தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும், நகராட்சி பொறியாளர் அவர்கள் ஆய்வு செய்து சாலை நல்ல நிலையில் அமைக்கப்பட்டு உள்ளது என குறிப்பு வழங்கியுள்ளார். எனவே, வார்டு–ஏ, பிளாக்–4, நகரளவை எண்.20/1சி மற்றும் மற்றும் 20/1டிக்கு கிழமேலடி இருபுறமும் 12.1/2 அடி தென்வடல் கிழபுறம் 89 அடி தென்வடல் மேற்புறம் 90 அடி ஆக மொத்தம் 1118.3/4 சதுரடிகள் மற்றும் 12.1/2 அடி தென்வடல் கிழபுறம் 90 அடி தென்வடல் மேற்பறம் 91அடி ஆக மொத்தம் 1131.1/4 சதுரடிகள் ஆக மொத்தம் 2250 சதுரடிகள் கொண்ட சாலையினை பொதுமக்களின் நலன் கருதி மேற்படியான பட்டா நில ஜெனரல் பவர் பத்திரம் மூலம் பவர் பெற்றவர் தானப்பத்திரம் மூலம் இலவசமாக சாலை பயன்பாட்டிற்காக வழங்கிய நிலத்தினை ஏற்கவும், அதனை ஏற்கனவே வார்டு–ஏ, பிளாக்–4, நகரளவை எண்.20/1ஏஇல் உள்ள நகராட்சி சாலையுடன் இணைப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.7614/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 703, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 53 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15 காலனி பள்ளி வீதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்யவும், BORE WELL MOTOR பழுதடைந்து பொது கழிப்பிடம் பயன்படுத்தாத நிலையில் உள்ளது. பழுதுகளை உடனடியாக சரிசெய்து கொள்ளவும், மேற்படி 5HP THREE PHASE SUBMERSIBLE MOTOR சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.40

இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட பணியினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 8313/2023/இ2)**

**தீர்மானம் எண் : 704, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 54 :</u>**

நாமக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடை 19கேட்பு பதிவேட்டின் படி கீழ்கண்ட மூன்று பாதாள சாக்கடை இணைப்புகளுக்கு 2012–2013 முதல் 2023–2024 வரை கேட்பு எழுப்பப்பட்டு நிலுவையாக உள்ளது. மேற்படி, பாதாள சாக்கடை இணைப்புகளின் இடத்தை வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட இடத்தில் பாதாள சாக்கடை இணைப்பு ஏதுமில்லை என கண்டறியப்பட்டது. எனவே, மேற்கண்ட தவறுதலாக எழுப்பப்பட்ட மூன்று இணைப்புகளின் நிலுவை மற்றும் நடப்பு கேட்பை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | பாதாள சாக்கடை இணைப்பு எண் | பாதாள சாக்கடை நீக்கம் செய்யவேண்டிய காலம் | பாதாள சாக்கடை நீக்கம் செய்யப்பட வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கமிஷனர்,283 சேலம்ரோடு உபசந்து –2 | 051/006/901690 | 2012–2013 முதல் 2023–2024 வரை | 13800 |
| 2 | சர்வேஷ்வரன், 31/20அ தில்லைபுரம் 3வது தெரு | 051/026/900248 | 2013–2014 முதல் 2023–2024 வரை | 6500 |
| 3 | சர்வேஷ்வரன், 31/21 தில்லைபுரம் 3வது தெரு | 051/026/900248 | 2013–2014 முதல் 2023–2024 வரை | 6500 |
| மொத்தம் | | | | 26800 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 5410/2023/இ2)**

**தீர்மானம் எண் : 705, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 55 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் அனைத்து பகுதியிலும் மக்களுடன் முதல்வர் சிறப்புத் திட்ட முகாம் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, நாமக்கல் நகராட்சியில் ஆறு இடங்களில் முகாம் நடைபெற தேவையான மேசை, நாற்காலி, சாமியானா பந்தல், Flex Banner, Fan, 3 Pin Power cable, Water Can, Stickers, Mike set, Focus light அமைத்தல் போன்ற பணிகளை நகராட்சி மூலம் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : -

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 7255/2023/இ3)**

**தீர்மானம் எண் : 706, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 56 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 நல்லிபாளையம் பகுதியில் உள்ள கழிப்பிடத்திற்கு அருகில் உள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தண்ணீர் வசதி ஏற்படுத்த மின்மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து வழங்கவும் இதர பழுதுகளை சரி செய்யும் பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8311/2023/இ3)**

**தீர்மானம் எண் : 707, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 57 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32 கணேசபுரம் பகுதியில் உள்ள பழுதடைந்துள்ள இரண்டு சிறுபாலத்தினை சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8310/2023/இ3)**

**தீர்மானம் எண் : 708, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 58 :</u>**

நாமக்கல் நிலவங்கி திட்டம் III–இல் நாமக்கல் கோட்டம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள **960** குடியிருப்புகளுக்கு நகராட்சிக்கான பாதாள சாக்கடை கழிவு நீர் ஏற்று தொட்டியில் இணைக்கப்பட்ட இணைப்புகளுக்கு கழிவுநீர் ஏற்று தொட்டியில் உள்ள மின் மோட்டார்களை சரிவர பராமரிக்காததால் அவ்வப்போது பழுது ஏற்பட்டு நகராட்சி சாலையின் கழிவுநீர் வெளியேறி வருவதுடன் நகராட்சிக்குட்பட்ட அப்பகுதியில் உள்ள குடியிருப்பு அருகாமையில் உள்ள தெருக்கள் மற்றும் நிலங்களில் கழிவுநீர் வந்து தேங்கி அப்பகுதிமக்களின் சுகாதாரம் பாதிப்படைகிறது. இதனை சீர் படுத்தும் பணிக்கு ரூ.**31.70** இலட்சம் மதிப்பீட்டுத் தொகை இந்நகராட்சிக்கு செலுத்த தெரிவிக்கப்பட்டு புதியதாக இரண்டு எண்ணிக்கை 25 HP (60M Head Non Clog Sewage Motor with Starter) கழிவுநீர் உந்து மோட்டார்கள் அதற்கு உண்டான ஸ்டார்டர்களையும் வாங்கி பொருத்தி கொள்ளும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.**30.00** இலட்சம் மற்றும் பழுதான மோட்டார்களை சரி செய்யும் பணிக்கு ரூ.**1.70** இலட்சம் ஆக மொத்தம் ரூ.**31.70** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், நாமக்கல் கோட்டம் இந்நகராட்சிக்கு PFMS Advice No.C122304327082, Date.05.12.2023 மூலம் ரூ.**31.70** இலட்சம் செலுத்தி பணியினை முடித்து கொடுக்க கோரியுள்ளனர். எனவே, மேற்கண்ட ரூ.**31.70** இலட்சம் மதிப்பீட்டிலான பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்: 12125/2018/இ2)**

**தீர்மானம் எண் : 709, பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண். 59 :</u>**

இந்நகராட்சியின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள **10** வார்டுகளில் (வார்டு எண் **20, 21, 22, 23, 24, 25, 26, 36, 37, 38**)–இல் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக குழாய்கள், ஆழ்துளை அடிக்குழாய் மற்றும் பொதுக்குழாய் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்து கொள்ளவும், குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி குழாய்களை பழுது பார்க்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.**15.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட பணியினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 8272/2023/இ2)**

**தீர்மானம் எண் : 710, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 60 :</u>**

இந்நகராட்சியின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள **19** வார்டுகளில் (வார்டு எண் **3, 4, 5, 11, 12, 13, 14, 15, 16, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 39**)–இல் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக குழாய்கள், ஆழ்துளை அடிக்குழாய் மற்றும் பொதுக்குழாய் ஆகியவற்றில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை

உடனடியாக சரிசெய்து கொள்ளவும், குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி குழாய்களை பழுது பார்க்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மேற்கண்ட பணியினை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்: 8271/2023/இ2)**

**தீர்மானம் எண் : 711, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 61 :</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொது சுகாதாரப் பிரிவின்கீழ் ”Clean Toilet Campaign” நிகழ்ச்சி நடைபெறுவதால் வார்டு 26 பூங்கா சாலையில் உள்ள கிராகுட்டை பொது கழிப்பிடத்தை Clean Toilet ஆக மாற்ற பழுதடைந்துள்ள கதவுகளை மாற்றி அமைக்கவும், மின் விளக்குகள் அமைக்கவும், பழுதடைந்துள்ள Water Closet மாற்றி அமைக்கவும், வர்ணம் பூசுதல் மற்றும் அனைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** : - மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 8312/2023/இ3)**

**தீர்மானம் எண் : 712, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**